பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

File (3)

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 18 வியாழக்கிழமை (01-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 67

# கொழும்பில் மத்திய வங்கியின் மீது பயங்கர வெடி குண்டுத் தாக்குதல்!

## இருநூறு பேர் பலி; 1400 பேர் படுகாயம் பல கட்டடத் தொகுதிகள் தீயில்

கொழும்பு, பெப்ரவரி 1

கொழும்பின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் - ஸ்ரீலங்கா மத்திய வங்கி மீது - நேற்று அதி பயங்கர வெடி குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

இத்தாக்குதலினால் இருநூறு பேர் வரை பலியானார்கள்; சுமார் ஆயிரத்து நானூறு பேர் படுகாயமுற்றனர்; நகரின் மையப் பகுதியில் இருந்த பல மாடிக் கட்டடத் தொகுதிகள் தீயில் கருகி நாசமாகின.

டிரக் அல்லது லொறியில் வெடிகுண்டுடன் வந்த தாக்குதல் நபர் அல்லது நபர்கள் நேற்று முற்பகல் 10.50 மணியளவில் இந்தப் பயங்கர வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கொழும்பு கோட்டையில் — நாட்டின் மிக முக்கிய கேந்திர மற்றும் வர்த்தகப் பகுதியில் — இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய வங்கியின் ஒரு பகுதி தகர்ந்தது

வெடிகுண்டுத் தாக்குதலில் மத்திய வங்கியின் ஒரு பகுதிக் கட்டடத் தொகுதி தகர்ந்தது.

எஞ்சிய பகுதிகள் பெயர்ந்து தொங்கிக் கொண்டு காணப்பட்டன.

மாடிக் கட்டடங்களின் வெளிச் சுவர்களைப் பிய்த்துக் கொண்டு உள்ளேயிருந்த பொருள்கள் வீசப்பட்டுக் கிடந்தன. பல மாடிகளில் இருந்தும் பெரும் புகையைக் கக்கியபடி தீச் சுவாலைகள் வெளியே எழுந்ததைக் காணமுடிந்தது.

எனினும் இத் தாக்குதலில் வங்கியின் முக்கிய ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு விட்டதாக மத்திய வங்கி ஆளுநர் கூறினார்.

## ஆபத்தான நிலையில் மேலும் 100 பேர்

படுகாயமுற்ற சுமார் 1400 பேரில் மேலும் நூறு பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

மொத்தம் 970 பேர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். களுபோவில ஆஸ்பத்திரியில் 400 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் கொழும்பில் உள்ள மற்றைய ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் நாற்பது பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

## வெடிகுண்டு டிரக் உள்ளே புகுவதற்கு துப்பாக்கி நபர்கள் வழி ஏற்படுத்தினர்

மத்திய வங்கி வாசல் பகுதிக்கு முன்பாக திடீரென துப்பாக்கிகளுடன் தோன்றிய சில நபர்கள் அங்கு பாதுகாப்புக் கடமையிலிருந்த காவலர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த நபர்களுக்கும் காவலர்களுக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது. அந் நபர்கள் இரண்டு குண்டுகளை வெடிக்க வைத்ததாகவும் கூறப்பட்டது.

இந்தச் சண்டையில் காவலர்கள் கொல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு வரை 56 சடலங்கள் மீட்பு

வெடிகுண்டுத் தாக்குதலில் உயிரிழந்த 56 பேரின் சடலங்கள் நேற்று முன்னிரவு வரை மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வெடி குண்டினால் தகர்ந்த கட்டட இடிபாடுகளுக்கு இடையே மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என்றும்— மேலும் பல சடலங்கள் கிடைக்கலாம் என்றும்— கருதப்பட்டது.

நேற்று மாலை இருட்டி விட்டதால் மீட்புப் பணிகள் நிறுத்தப்பட்டதாகவும் இன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மீது அரசு குற்றச்சாட்டு

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற பயங்கரக் குண்டு வெடிப்புக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று அரசாங்கம் குற்றம் சாட்டியது. அரசாங்கத்தின் பொதுசன தொடர்பு சாதனங்கள் விடுதலைப் புலிகளே இத் தாக்குதலை நடத்தியதாக அறிவித்தன.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் ''ரூபவாஹினி'' மூலம் விடுத்த செய்தியில் விடுதலைப் புலிகளே இக்குண்டு வெடிப்பை நடத்தியதாகக் கூறினார்.

இத் தாக்குதலைத் தாம் நடத்தியதாக விடுதலைப் புலிகள் ஏற்கவுமில்லை; செய்வில்லை என மறுக்கவுமில்லை என்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 400 கார்கள் நாசமாகின 6 கப்பல்களும் சேதமுற்றன

கோட்டையில் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் அப்பகுதியில் பல இடங்களிலும் நிறுத்தப்பட்டிருந்த சுமார் 400 கார்கள் முற்றாக நாசமாகின.

அருகில் கொழும்பு சர்வதேச துறைமுகத்தில் தரித்து நின்ற ஆறு சரக்குக் கப்பல்களும் இத்தாக்குதலினால் பாதிக்கப்பட்டன.

இத்தாக்குதலில் சின்னா பின்னமாகி, நசுங்கி, உருக்குலைந்து காணப்பட்ட கார்கள், மினிபஸ்கள், ஓட்டோக்கள் என பல வாகனங்களை ரூபவாஹினி ஒளிபரப்பியது. பல வாகனங்கள் உருத் தெரியாமல் சிதறிக் கிடந்தன.

## தகர்ந்த கட்டடங்களுக்கு கீழ் தங்க சேமிப்பு அறை

மத்திய வங்கி கட்டடத் தொகுதியில் நிலத்துக்குக் கீழ் இரண்டு நிலவறை மாடிகள் உள்ளன. நாட்டின் முழுத் தங்க சேமிப்பும், பண நோட்டுக்களும் இந்த நிலவறை மாடிகளில் உள்ள பாதுகாப்பு அறைகளிலேயே சேமிக்கப்பட்டிருந்தன.

பல்லாயிரக் கணக்கான கோடி ரூபா பெறுமதியுடைய இவற்றுக்கும் நிலத்துக்குக் கீழான மாடிகளில் கடமையிலிருந்த ஊழியர்களுக்கும் ஏற்பட்ட கதி என்னவென்று இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவில்லை.

நிலத்துக்கு மேல் ஒன்பது மாடிகள் உள்ளன. இந்த மாடிகள் தகர்ந்து வீழ்ந்ததால் நிலவறைகளுக்கான பாதை மூடப்பட்டுவிட்டனவா என்பதும் தெரியவரவில்லை.

## மத்தியவங்கி ஊழியர்களில் நூறு போரைக் காணோம்?

குண்டுத் தாக்குதல் நடந்த சமயம் எண்ணூறு ஊழியர்களும் சுமார் இரண்டாயிரம் பேரும் மத்திய வங்கிக் கட்டடத்துக்குள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளேயிருந்த ஊழியர்களில் சுமார் எழுநூறு பேர் மீட்கப்பட்டு விட்டதாக நேற்று பிற்பகலில் அறிவிக்கப்பட்டது.

எஞ்சிய நூறு ஊழியர்களின் கதி குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் இச்சம்பவத்தில் மத்திய வங்கி ஊழியர்கள் நாற்பது பேரை தாங்கள் இழந்திருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் அறிவித்தார்.

## ஜனாதிபதி மாளிகையின் அருகே குண்டு வெடித்தது

குண்டு வெடிப்பு நடந்த இடத்திலிருந்து ஒரு புறத்தில் சுமார் நூறு யார் தொலைவில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமும், மறுபுறத்தில் சுமார் நூறு யார் தொலைவில் ஜனாதிபதியின் அலுவலகமும் (பழைய நாடாளுமன்றமும்) உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்குதலுக்கு இலக்கான மத்திய வங்கிக்குப் பின்னால் கடற்படையின் முக்கிய அலுவலகமும், கடற்படை உயரதிகாரிகளின் இல்லங்களும் உள்ளன.

ஹில்டன் ஹோட்டல், இலங்கை வங்கி தலைமைப் பணிமனை, இன்ரர் கொண்டினன்ட் ஹோட்டல், ஹட்டன் நஷனல் வங்கி தலைமையகம் உட்பட பல முக்கிய கட்டடங்கள் இப்பகுதியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு கருதி ஜனாதிபதி தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்காமல் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டவர்கள் சிலரும் நேற்றைய சம்பவத்தில் பலி!

நேற்றைய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வெளிநாட்டவர்கள் சிலரும் பலியாகியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதனாலும், சம்பவம் நடைபெற்ற பகுதியிலிருந்த சில ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் சேதமுற்றதாலும், அங்கிருந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பலர் காயமடைந்ததாலும் ஸ்ரீலங்காவின் உல்லாசப் பயணத்துறை பெரிதும் பாதிப்புறும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

மீசாலை கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குள் வாணிபம் செய்யும் அனைத்து வணிக நிலையங்களும் **1996 - 02 - 15** ஆம் திகதிக்கு முன்னர் குறித்த மன்றில் அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தை பெற்று வாணிபத்திற்கான அங்கத்துவத்தை பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- மன்ற எல்லைக்குள் யாழ். சாலையில் அமைந்துள்ள அத்தியாவசிய வணிக நிலையங்கள் தவிர்ந்த மற்றும் வணிக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பூட்டப்படும்.

கைத்தொழில் வணிகர் மன்றம்
மீசாலை,

(40043)



## இலங்கை வங்கி
### வாடிக்கையாளருக்கான
## முக்கிய அறிவித்தல்

கீழ்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் நிலையான கட்டளை (Standing Order) முறை மூலமான தமது கொடுப்பனவு ஒழுங்குகளை செய்து கொண்ட வாடிக்கையாளருக்கு அறியத் தருவது யாதெனில், தங்களது மாதாந்த / காலாண்டு/ அரையாண்டு/ வருடாந்தக் கொடுப்பனவுகளை அது சம்பந்தமான ஆவணங்கள் எடுத்து - வராமையினால் நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளோம்.

எனவே, கார்த்திகை 1995 முதல் மறு அறிவித்தல் வரை தங்கள் தவணைக் கொடுப்பனவுகளை நேரடியாக அந்தந்த நிறுவனங்கள் / நபர்களுக்கு வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும், புதிய நிலையான கட்டளைகளை கீழ் வரும் கிளைகளில் ஏற்று நடாத்த முடியாத நிலையில் உள்ளோம் என்பதையும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கை வங்கி — யாழ். மேற்தரக் கிளை,
யாழ். இரண்டாம் கிளை,
ஊர்காவற்றுறைக் கிளை,
காங்கேசன்துறைக்கிளை,
சுன்னாகம் கிளை,
மானிப்பாய் கிளை.

பிரதான முகாமையாளர் - யாழ். மேற்தரக கிளை.
மாவட்ட முகாமையாளர் - மாவட்டக் காரியாலயம்.

(சி/2961)


## மரண அறிவித்தல்கள்

### ஞானசேகரம் வைத்திலிங்கம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது சரசாலை தெய்வங்கேணி வீதியில் வசித்தவருமான ஞானசேகரம் வைத்திலிங்கம் 31 - 01 - 1996 இல் காலமானார். இவர் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், சிவபாலன், தர்மபாலச்சந்திரன் (சித்த ஆயுள்வேதம், கோபாம் - சாவகச்சேரி), ஜெயபாலன் (லங்கா சிமெந்து லிமிற்றெட்), ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி, கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், செந்திலவாசன், செந்தில்குமரன், செந்தில்ராஜன், விஜிதா தபோஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-02-96) நண்பகல் 12-00 மணிக்கு தெய்வங்கேணி வீதியிலுள்ள ச. கணபதிப்பிள்ளையின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தர்மபாலச்சந்திரன்
(அன்னப்பிள்ளை)
(மகன்)

(40298)

### தம்பிப்பிள்ளை இராஜம்மா

சீனியர் லேன், கலட்டியில் வசித்து வந்தவரும், தற்போது சரசாலை தெற்கு ஆயிலடி லேனில் வசித்தவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியுமாகிய இராஜம்மா நேற்று 31 - 01 - 96 இல் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற இராஜதுரை, சந்திரராஜா (பிரான்ஸ்), நித்தியானந்ததேவி (பிரான்ஸ்), ஸ்ரீஸ்கந்தராசா, அனிந்தாதேவி (கொழும்பு) ஆகியோரின் தாயாரும், தெய்வேந்திரம் (பிரான்ஸ்), கமலேஸ்வரி, கலாதேவி, கணேசன் (கொழும்பு துறைமுக அதிகார சபை) ஆகியோரின் அருமை மாமியாரும், அஜரகன், ஜெனரகன், ஆதித்யா (பிரான்ஸ்), சதீஜா, செந்துஜா, டினோஜன், சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (01-02-96) காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்கு வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
த. ஸ்ரீஸ்கந்தராஜா
(மகன்)

(40299)

★ கோப்பாய் மற்றும் பலாலி

# ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் இரண்டையும் மூடிவிட அரசு முடிவு?

சாவகச்சேரி, பெப். 1

பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை மூடிவிடவும் —

அங்கு பணியாற்றியவர்களை வேறு இடங்களுக்கு இடமாற்றவும் —

வழிவகுக்கும் வகையிலான திட்டம் ஒன்றை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் ஆணையாளர் கல்வி, உயர் கல்வி அமைச்சருக்கு சமர்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆணையாளர் திரு. மெத்தானந்தா, கல்வியமைச்சு மேலதிக செயலாளர் கமலா விக்கிரமசிங்கா ஆகியோருடன் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் நடத்திய பேச்சுக்களின்போது இத்தகவல்கள் வெளியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொலைக் கல்விப் பயிற்சி வசதி போன்றவை இருப்பதால், ஆசியரிய பயிற்சிக் கலாசாலைகளில் அனுமதி பெற்று இரு வருடப் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பிப்போர் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளதாகவும் —

கடந்த ஆண்டில் கோப்பாய், பலாலி ஆகிய இரு பயிற்சிக் கலாசாலைகளிலும் மொத்தமாக 14 மாணவர் மட்டுமே சேர்ந்து கொண்டனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் —

இந்த வருடம் வடக்கிலிருந்து ஆசிரியர் பயிற்சிக்கால சாலைகளுக்கு விண்ணப்பித்தோர் எண்ணிக்கை மிகமிக சொற்பம் என்றும் —

அவர்களும் அட்டாளைச்சேனை, அளுத்கம, மட்டக்களப்பு, எதன்மசட் ஆகிய இடங்களில் உள்ள பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியைப் பெற விரும்புவதாகவும்—

ஆகவே தற்போது 2 ஆம் ஆண்டு மாணவர்களாக இருக்கும் 14 பேருக்காக பலாலி, கோப்பாய் கலாசாலைகளைத் தொடர்ந்து நடத்த அரசு விரும்பவில்லை என்றும் —

அந்த மாணவர்கள் விரும்பினால் அவர்களுக்கும் ஏனைய கலாசாலை ஒன்றில் இடம் வழங்கலாம் என்றும் —

ஆசிரிய கலாசாலைகளின் ஆணையாளர் மெத்தானந்தா தெரிவித்தாராம்.

மேலதிக செயலாளர் கமலா விக்கிரமசிங்கவும் இதே கருத்தையே வலியுறுத்தினார்.

இந்த விடயம் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்று கல்வி, உயர் கல்வி அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் —

அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்ததும் இக்கலாசாலைகளின் நிரந்தர விரிவுரையாளர்களை வேறு இடங்களுக்கு இடமாற்றவும் —

தற்காலிகமாக இணைக்கப்பட்டவர்களை மீளவும் அவர்களின் முன்னைய பதவிகளுக்கு அனுப்பி வைக்கவும் —

ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கோப்பாய், பலாலி கலாசாலைகளில் 60 பேர் பணியாற்றுவதாகவும் —

தவிர, சமயாசமய வேலையாட்களாகப் பணியாற்றும் மேலும் 20 பேர்வேலை இழக்க வேண்டியேற்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## கடற்படை தாக்குதல்

வடமராட்சி, பெப். 1

ஆழ்கடலில் வெற்றிலைக்கேணிப் பகுதியிலிருந்து காங்கேசன்துறைப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை 4 மணியளவில் சென்றுகொண்டிருந்த கடற்படையினரின் இரு டோறாப் படகுகள் கரையோரப் பகுதிகளை நோக்கி வெளிச்சம் பாய்ச்சி தாக்குதலை நடத்தின.

இதனால் அச்சமயம், முனை, பருத்தித்துறை, சுப்பர் மடம் கடற்பகுதிகளில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் தமது வலைகளை கடலிலேயே விட்டுவிட்டு அவசரமாகக் கரைதிரும்பினர்.

(உ-80-173)

## புலிகளின் முடிவுக்கு வரவேற்பு

சாவகச்சேரி, பெப். 1

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி விடுதலைப் புலிகள் முடிவு செய்திருப்பதை வரவேற்பதுடன் அதற்காக நன்றி தெரிவிப்பதென வேம்படி மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று நேற்றுக் காலை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சமயமே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (உ-3)

## ஆசிரியர் சம்பளம்

சாவகச்சேரி, பெப். 1

யாழ். மாவட்ட ஆசிரியர்களின் ஜனவரி மாதச் சம்பளம் காசோலையாக நேற்றுமுதல் வழங்கப்பட்டு வருவதாக வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார். (உ-3)

## இன்று மாலை வழக்காடுமன்றம்

சாவகச்சேரி, பெப். 1

''நாடும் நாமும்'' நிகழ்வுத் தொடரில் இன்று வியாழக்கிழமை ''குற்றவாளிக் கூண்டில் தமிழீழ இளைஞர் யுவதிகள் என்ற தலைப்பிலான வழக்காடு மன்றம் நடைபெறவுள்ளது.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இன்று மாலை 6. 30 மணிக்கு ஆரம்பமாகும் வழக்காடு மன்றத்தில் தமிழீழத்தின் தலைசிறந்த அறிஞர்கள் கலந்து கொள்வர் என்று ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

(அ)

## பாடசாலை அலுவலகங்கள் இன்று முதல் இயங்கும்

சாவகச்சேரி, பெப். 1

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ள ஆசிரியர்கள், அதிபர்கள் இணைந்து தத்தமது பாடசாலைகளுக்கு என ஓர் இடத்தைத் தெரிவு செய்து — அதனை அலுவலகமாகப் பயன்படுத்தி — இன்று முதல் அங்கு கையொப்பம் இட்டு செயற்படவிருக்கிறார்கள்.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள், பொது இடங்கள், அதிபர்கள் இல்லங்கள் என பலவிடங்களிலும் இடம்பெயர்ந்த பாடசாலைகளின் அலுவலகங்களைச் செயற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இன்று முதல் அந்தந்த இடங்களில் ஆசிரியர்கள் ஊழியர்கள் தமது வரவை, பதிந்து தமது செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தமது பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்களின் விவரங்களையும் அங்கு அவர்கள் பதிவு செய்வர் என்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (உ)

## புதிய இடத்தில் அலுவலகம்

சாவகச்சேரி, பெப். 1

இதுவரை காலமும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கிவந்த தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில் கோட்டக் கல்வி அலுவலகங்கள் இன்று தொடக்கம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)


## தர்மிசா ரவல்ஸ்

2-2-96 பிரயாணம் செய்யவிருந்த வயோதிபர்களும் நோயாளிகளும் இன்று காலை 9 மணிக்கு அலுவலகத்தில் சந்திக்கவும்.

(40044)


## மரண அறிவித்தல்

### மனுவேற்பிள்ளை றோசமுத்து
(தங்கர்)

சில்லாலைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை றோசமுத்து 29-1-96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளையின் மனைவியும், மரியநாயகம், மேரிமாகிறேற் ஆகியோரின் தாயாரும், மேரிபற்றிமா, தேவதாஸ் ஆகியோரின் மாமியாரும், விஜி, சாள்ஸ், கமலினி, றொபின்சன், ஜொய்சி, சஜிவ், மேசி, அரஸ் டானியல், அனிற்றா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கைதடியில் 30-1-96 நடைபெற்றது.

தகவல்:
தே. அனற்மேசி
(பேர்த்தி)

மிருசுவில்

(40C42)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மீட்பு நிதி மீளளிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம்

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல் 1995, முதற் கட்ட கடன் மீளளிப்பின்போது மீளப் பெறாத வலிகாமம் மக்களின் நலன் கருதி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கடன் பத்திர தொடர்பு எண்ணும் முழுப்பெயரும் உதயன் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும். இப் பட்டியலில் ஒரு பகுதி இன்று பிரசுரமாகிறது.

## யா / யா

26 — கொன்ஸ்ரன்ரைன் அம்பலவாணர் விஜயரட்ணம்
184 — சின்னையா அந்தோனிப்பிள்ளை
199 — இரத்தினம் தவராசா
210 — மகேஸ்வரி சிவசெல்வநாதன்
217 — தம்பிஐயா கருணாமூர்த்தி
243 — சிவசம்பு விஜயரத்தினம்
258 — தனலட்சுமி சுப்பிரமணியம்
317 — மற்ஜில்ட யோசப்
322 — நந்தினி யோகலிங்கம்
326 — அமிர்தநாயகி விக்னேஸ்வரராஜா
399 — அருட்பிரகாசம் இம்மானுவல்
440 — மேரிபுஸ்பம் சூசைநாதர்
473 — தங்கரத்தினம் தம்பிராசா
582 — சத்தியப்பிள்ளை அல்பிரட்
639 — சுந்தையா தர்மலிங்கம்
699 — வெற்றிவேலு பாலசுப்பிரமணியம்
816 — ஜெகதீசன் சுஜீந்திரன்
821 — கணபதிப்பிள்ளை சரவணபவான்
962 — யூலியற் டேவிற்
1004 — யோசவ் பங்கிராஸ்
1042 — லலித்தா விக்ரர்
1071 — சிசிலியா சோபியாஜெயமணி நேசராசா
1085 — பாமா சிவபாலன்
1142 — திரேசா வரப்பிரகாசம்
1150 — கணேசபிள்ளை ஜெயவீரசிங்கி
1232 — கணேசபிள்ளை றெபேட் தவேந்திரன்
1295 — வேலர் ஐயாத்துரை
1381 — கமலாதேவி இரங்கநாதன்
1406 — யோசப் வஸ்தியாம்பிள்ளை
1464 — அந்தோனிப்பிள்ளை செபரட்ணதாஸ்
1492 — இரத்தினம் இரத்தினகோபால்
1537 — துரையப்பா இரத்தினம்
1622 — சியாமளா தியாகராஜா
1643 — சாம்சன் வினோதவீரன் குருபாதம்
1694 — ரஞ்சினி சிவசுப்பிரமணியம்
1707 — காளிக்குட்டி சுப்பிரமணியம்
1735 — வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி
1748 — குமாரசாமி கதிரவேல்
1790 — லெட்சுமி கோவிந்தபிள்ளை
1930 — செபஸ்ரி அடைக்கலம்
1954 — நவறஞ்சினி சுந்தரலிங்கம்
1966 — கந்தையா செகராசா
1989 — சின்னக்குட்டி தியாகராசா
2019 — டோமினிக் அஞ்சலோ ஜெயரெட்ணம்
2034 — பரமசாம் இராசலிங்கம்
2116 — கந்தையா சோமாஸ்கந்தன்
2141 — மேரிஅமலா இராஜேஸ்பரம்
2156 — ஸ்ரெலா யோன்பிள்ளை
2162 — மல்லிகாதேவி பாலச்சந்திரன்
2174 — ஜெயராணி ஞானப்பிரகாசம்
2181 — பாலசிங்கம் பாலச்சந்திரன்
2218 — மரிஸ்ரெலா ஜெயபதி ஜெயரட்ணம்
2231 — சலமோன் அலெக்சாண்டர்
2261 — கிறிஸ்தோப்பர் அல்பிரட் ஞானசீலன்
2304 — மிக்கேல் பாக்கியநாதர்
2306 — மனுவேல்பிள்ளை வில்பிறெட்
2382 — ஜேம்ஸ் எமில் பாஸ்கரன்
2402 — பொன்னுத்துரை சர்வானந்தன்
2418 — அன்னம்மா சின்னத்துரை
2430 — யோசப் டமஸஸ்
2495 — கலிஸ்ரா பொஞ்சின்
2499 — பெஞ்சமீன் அப்போலீனார் சாள்ஸ்
2510 — சீமான்பிள்ளை சில்வெஸ்ரர்
2576 — கந்தன் கந்தசாமி
2581 — குலசேகரம் அன்னசிங்கம்
2648 — கணபதிப்பிள்ளை மார்க்கண்டு
2652 — பொன்னம்பலம் சிவலோகநாதன்
2660 — கிருபாராணி சயனொளிபவன்
2679 — காசிநாதர் குட்டித்தம்பி இராசரெட்ணம்
2681 — விஜலட்சுமி சிவானந்தன்
2690 — யோகாம்பிகை சிவகடாட்சம்
2708 — யோகராணி சீவரத்தினம்
2765 — குழந்தைவேலு இராமநாதன்
2776 — யோகசுந்தரம் சிவகுமார்
2853 — தவமலர் வேலாயுதபிள்ளை
2908 — செல்லையா சண்முகசுந்தரம்
2928 — அன்னம்மா மாணிக்கவாசகர்
2968 — இராஜேஸ்வரி குணரெட்ணம்
2971 — சண்முகம் கணபதிப்பிள்ளை
3009 — செபஸ்தியாம்பிள்ளை பிறெட்றிக்
3015 — செபஸ்தியாம்பிள்ளை பிறெட்றிக்
3056 — டோமினிக் விக்ரர் இராஜரெட்டிணம்
3121 — பிரான்சிஸ்கா அலோசியஸ்
3122 — அந்தோனிமுத்து யோசவ்
3160 — கறாலயின் மரிகோல்ட் செல்மணி பிரான்சிஸ் ஒவ்மேரி
3163 — பஞ்சநாயகி பிரான்சிஸ்கா சின்னத்துரை
3275 — தேவறாஜேஸ்வரி ஸ்ரனிஸ்லாஸ்
3304 — ஆசையர் கணபதிநாதன்
3335 — மேரிபவுலின் குசைதாசன்
3375 — யோசேப்பின் அமிர்தநாயகம்
3401 — ஜெறோமினா பொனான்டோ
3418 — சிங்கராஜர் சேவியர்
3448 — றோஸ் ஆரோக்கியநாதர்
3468 — கொன்சி யோசப் பெர்ணாண்டோ
3531 — றோஸ்மலர் பிரான்சிஸ்
3540 — சிறில் மைக்கேல்
3562 — அல்பிறட் வரதன்
3639 — பரிமளரத்தினம் திருநாவுக்கரசு
3716 — இராசம்மா கனகசபை
3782 — இராசையா தெய்வேந்திரன்
3807 — புஸ்பராணி மற்றவராஜன்
3833 — பத்மாவதி கேதீஸ்வரநாதன்
3838 — திலகேஸ்வரி கந்தசாமி
3849 — சபாபதி சிவஞானம்
3860 — ஜெகதீஸ்வரி சபாலிங்கம்
3890 — சிவபாக்கியம் நடராஜா
3916 — செல்வமலர் மாணிக்கராசா
3929 — செல்வராசா சோமநாதன்
3954 — சிரோஜினிதேவி விக்கினேஸ்
3974 — செல்வமனோகரி சுப்பிரமணியம்
4131 — அந்தோனிப்பிள்ளை கிறிஸ்தோப்பர்
4177 — சவரிமுத்து சனகராஜன்
4227 — சங்கரன் சரிகரன்
4256 — நீக்கலாப்பிள்ளை எட்மன் குணசீலன்
4306 — நிமலாம்பிகை குக்
4315 — மனவல் யோசேப் சூசைதாசன்
4326 — ஜெமிலா தாசியஸ்
4337 — மொனிச்காமாகிறட் செபரட்ணம்
4417 — லூர்தநாயகி கிறேசியன்
4429 — பேளியொச்சி தேவதாஸ்
4541 — இந்திராதேவி யோகநாதன்
4551 — சுப்பிரமணியம் இராசநாதன்
4593 — மனவல் சூசைவின்சன்ற்
4657 — மகேஸ்வரி சோமசேகரம்
4673 — அருளப்பு அருள்ராசா
4711 — யோகேஸவரி ரட்ணசபாபதி
4803 — கதிரேசு நடராஜா
4839 — பபியோலா செல்வராணி லாசறஸ் குணநாயகம்.
4866 — மேரிசோபியா விஸ்வலிங்கம்
4917 — ஜெயமணி மரியநாயகம்
4919 — யசிந்தா மரியதாஸ்
4979 — றோசலின் சூசைப்பிள்ளை
4983 — அந்தோனிப்பிள்ளை பெர்னாண்டோ
5017 — மேரிறோஸ் டிஸ்மஸ்
5036 — மாணிக்கம் மரியதாஸ்
5039 — சரஸ்வதி ஐயாத்துரை

## யா / வெ

19 — சூசன் சுகிர்தம் சில்வஸ்ரர்
21 — கமலாதேவி கோபாலரத்தினம்
28 — ஜெயபதி தயாபரன்
45 — அருள்விழி அருளலிங்கம்
47 — ரூபிணி பாலச்சந்திரா
55 — வைத்திலிங்கம் இரகுநாதமுதலியார்
61 — சகுந்தலாதேவி சச்சிதானந்தசிவம்
63 — மங்களேஸ்வரி இராமதாஸ்
65 — கணபதிப்பிள்ளை விக்னராசா
86 — தமயந்தி சந்திரபாலன்
100 — முத்துமலர் விஜயரத்தினம்
124 — எவரெஸ்ரா தோமஸ் அன்ரனி
133 — ஜிவராஜா அஜித்நியூட்டன்
147 — ஞானாம்பிகை பத்மசிகாமணி
150 — கருணைநாயகி சீவரத்தினம்
156 — நாகமணி குணரத்தினம்
197 — கந்தசாமி பலராமன்
207 — ரேவதி ஸ்ரீரங்கன்
236 — புவனேஸ்வரி கனகசபை
239 — கணேஸ் வைத்தீஸ்வரன்
248 — செல்லையா மகாதேவா
250 — காசிநாதர் இராஜேந்திரன்
252 — சுப்பிரமணியம் கதிரவேல்
253 — மங்களம் இராஜன்
254 — நேவிஸ் றோசாறி
255 — ஆரோக்கியசீலி கோமஸ்
275 — வனிதாமணி கோபாலநாதன்
302 — மரியதாஸ் டோனிகேட்டிஸ்
305 — சந்தாம்பிள்ளை மேஜர் அன்ரன்
322 — திரேசா இம்மானுவல்
329 — கீதா விஜயராஜா
332 — பராசக்தி செல்வநாயகம்
370 — மார்க்கண்டு ரவிசங்கர்
383 — நாராயணசாமி சந்திரசேகரன்
396 — சதாசிவம் அற்புதேவராஜா
403 — முத்துக்குமாரு விநாயகசேகரம்
425 — பாக்கியநாதர் கிறிஸ்ரியோசப்
430 — கிருபா டேவிட் நடராசா
437 — வேலாயுதபிள்ளை புவனேந்திரன்
436 — ராகினி துரையப்பா
442 — மரியாம்பிள்ளை அன்ரன் அருளேஸ்வரன்
456 — அந்தோனிப்பிள்ளை டக்கிளஸ் லையனஸ்
463 — தையல்நாயகி இராமநாதன்
465 — நாகேஸ்வரி மாசிலாமணி
473 — சுப்பிரமணியம் சண்முகநாதன்
484 — பசுபதிப்பிள்ளை அரசரத்தினம்
493 — முருகேசு தேவராஜா
502 — சண்முகநாதன் யோகநாதன்
507 — திவ்யசிரோன்மணி நாகராஜா
523 — சுகிர்தா துரைசுவாமி
526 — ஆறுமுகம் சிவபாலசுந்தரம்
529 — இராஜசூரியர் ஈஸ்வரகுமாரன்
531 — [illegible] மரியாம்பிள்ளை
540 — சங்கரையா நாராயணசாமி
541 — மரியாம்பிள்ளை பிரான்ஸிஸ் கிறிஸ்ரின்
543 — லலிதா தர்மகுலசிங்கம்
544 — சிவபாக்கியம் சிறிபாலமோகன்
556 — மயில்வாகனம் சிவராசா
596 — அருணாசலம் கதிர்காமநாதன்
598 — இராஜேஸ்வரி வேலுப்பிள்ளை
607 — முத்துராணி ஜெகராசசிங்கம்
628 — பீஸ்ஜோய் ஞானதுரை
640 — வயிலற் யோண்
670 — மனுவேல் அல்பேட் இரத்தினசிங்கம்
682 — நாகலிங்கம் செல்வராசா
734 — பிரான்சிஸ் மக்ஸ்மியன்
736 — பிரான்ஸிஸ் மக்ஸ்மியன்
756 — சபாநாதன் நைலஸ் றுபநாதன்
773 — நிரஞ்சினி பாலசுப்பிரமணியம்
774 — நாகர் தம்பித்துரை
776 — சூலேந்திரன் வயிரவிப்பிள்ளை
777 கொலட் சுவாம்பிள்ளை
789 — கிறேஸ் விமலராணி லோறன்ஸ்
844 — நிர்மலாதேவி ஜெயராஜா
846 — அருள்சோதி சோமசுந்தரம்
852 — தில்லையம்பலம் ஜெகதீசன்
876 — அன்ரன் எகஸ்பொற்றஸ் சுவாஜி இராசேந்திரா
881 — மேரிபுளோரன்ஸ் யோசவ்
900 — புஸ்பராணி இலங்கைநாதன்
921 — நிர்மலா அன்னலிங்கம்
960 — தர்மலிங்கம் கிருஸ்ணசாமி
963 — மகேஸ்வரி திருஞானசம்பந்தமூர்த்தி
978 — ராகினி தியாகராசா
994 — கனகசபை தெய்வேந்திரராஜா
1011 — பத்மாவதி வாசுதேவன்
1012 — கமலாதேவி சண்முகராசா
1021 — கமலாதேவி ஜெயச்சந்திரன்
1023 — தவரஞ்சினி சிவசுப்பிரமணியம்
1025 — பொன்னுச்சாமி யோசப் தேவானந்தன்
1030 — சந்தையா இரத்தினம்
1034 — ரிசிவதனி கனகரட்ணம்
1043 — கந்தையா விஸ்வலிங்கம்
1073 — தர்மலிங்கம் இராட்ணசிங்கம்
1074 — நாகரத்தினம் செல்வராசா
1076 — வினோதினி பத்திநாதர்
1089 — கிரகரி செபஸ்தியாம்பிள்ளை
1091 — சிந்தியா இராசநாயகம்
1095 — ஆரோக்கியம் யோசவ் யேசுதாசன்
1103 — திருஞானசம்பந்தர் யஸ்மின்நாயக்கபாபு
1105 — இரசன்சியா பாமினி இராசையா
1111 — லலிதாதேவி நிற்சிங்கம்
1119 — சுகுணவதி துரைராசா
1126 — கதிரவேலு மோகனதாஸ்
1133 — பிரேமினி மோதஸ்
1146 — நாகராஜேஸ்வரி பரராசசேகரம்
1159 — லீலாவதி பாலச்சந்திரன்
1163 — தேவகி செல்வவிநாயகப்பிரகாசம்
1172 — குமாரசாமி இரகுநாதன்
1183 — சின்னத்துரை சிவலிங்கம்
1201 — செல்லத்துரை இராஜேந்திரா
1228 — செல்லத்துரை சூரியகுமார்
1233 — வில்பிரட் ஜெயராசா சொலமன்ஸ்
1242 — சுப்பையா யோகரட்ணம்
1251 — பூமகள் நடராஜா
1263 — சிவகாமசுந்தரி அண்ணாமலை
1276 — நல்லம்மா குழந்தைவேலு
1281 — ஜெகதீஸ்வரி குமாரசிங்கம்
1291 — பிறேமினி அரியரட்ணம்
1325 — பகவதி மார்க்கண்டு
1330 — தங்கவேல் மகேந்திரா
1339 — ஆறுமுகம் சுந்தரலிங்கம்
1345 — கிறிஸ்ஸலோகஸ் மனோகரன்
1346 — அந்தோனி செபநேசன்
1350 — சரோன்நிருபா அனுசியாசினெஸ்
1353 — நடராசா கமலநாதன்
1363 — யோகேஸ்வரி மகாலிங்கம்
1365 — கனகேஸ்வரி விவேகானந்தன்
1371 — இராமையா நந்தகுமார்
1380 — சுடித்தா பரமதாசன்
1404 — கலைவாணி தனபாலன்
1419 — மகேஸ்வரி இலட்சுமணன்
1425 — மேர்போலினோவ்ஜோன் கலாசியஸ்
1431 — விக்கினேஸ்வரி தனஞ்சயன்
1455 — செயஸ்ரிஜேம்ஸ் யோக்கின்பிள்ளை
1486 — றோகினிறஜிகலா அன்ரனற்சாள்ஸ்
1487 — சுவர்ணராணி சிவசங்கர்
1497 — மனோரஞ்சிதமலர் தனபாலசிங்கம்
1508 — பிலிப்பு பிரகாசராஜா
1531 — தம்பு தியாகராசா
1540 — லோகநாயகி பரமானந்தன்
1543 — செபஸ்தியாம்பிள்ளை ஸ்ரீபன்
1545 — விஜயலக்சுமி குமாரசாமி
1547 — மாலினி சிறிகரன்
1552 — செல்லையா மகேந்திரன்
1561 — மாலினி நரேந்திரன்
1566 — சுவக்கின் யோசவாஸ்
1586 — ஜயந்தி கனகசுந்தரி
1591 — வல்லிபுரம் அப்புத்துரை
1640 — மேரிகாமலா பத்மராஜா
1643 — அரங்கநாயகி குணரத்தினசிங்கம்
1647 — இரத்தினபூபதி விவேகானந்தன்
1662 — புளோறன்ஸ்பெனற் இமானுவேல்
1684 — ராஜலட்சுமி திருநாவுக்கரசு
1689 — இராமு இராமச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சாளி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:பட்டு, நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஒழுங்கை, அரசடிச் சந்தி, நெல்லியடி. (40111)

புதிய றொபின் EY 20 நீர் இறைக்கும் இயந்திரம் உடன் விற்பனைக்கு உண்டு, தொடர்பு:- திருமதி பு. ஞானப்பிரகாசம், வாகையடிச் சந்தி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (40038)

1995 ஆம் ஆண்டு நடந்து முடிந்த கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வர்த்தகம் (O/L) வினாத்தாள்கள் விற்பனையாகின்றன பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 8, நவீன சந்தை (உட்புறம்) சாவகச்சேரி. (சி-2954)

### வீடு விற்பனைக்கு

சரசாலை தெற்கு, கனகம் புளியடிச் சந்திக்கு அருகாமையில் புத்தூர் வீதியில், தற்பொழுது சரசாலை உபதபாற்கந்தோர் அமைந்திருக்கும் வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு, நேரில் தொடர்பு கொள்ளவும். (40291)

### தேவை

நல்லின பால் ஆடு அல்லது பால் விலைக்குத் தேவை. இராமலிங்கம் C/o Dr ஞானசம்பந்தர் 3, சிவன் லேன், சாவகச்சேரி. (40037)

### வகுப்பு

வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைகளுக்கு அமைய வயலின், மிருதங்க வகுப்புக்கள் நடத்தப்படும். பயில விரும்பும் பழைய, புதிய மாணவ, மாணவிகள் வருகிற தைப்பூச தினத்தன்று (04-2-96) காலை 9 மணியளவில் கீழ்வரும் முகவரியில் சந்திக்கவும் R.S. கேசவமூர்த்தி (வயலின் வித்துவான்) திருநெறிக் கழகம் (கிருஷ்ணன் கோவில் முன்பாக) கிளிநொச்சி. (40040)

## பனை, வெல்லம் தயாரிப்பு

சாவகச்சேரி, பெப். 1

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உயிலங்குளம் கிளை பனைவெல்லத் தயாரிப்பை விரிவுபடுத்தியுள்ளது.

இந்தக்கிளையில் உற்பத்தி செய்யப்படும் வெல்லம் கிலோ 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என வடபிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் தெரிவித்தார். (இ-7

## சாரையடியில் இளம் பெண் காயம்

வடமராட்சி, பெப். 01

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் வீதி சாரையடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

சைக்கிளில் சென்றவரான வதிரி மணியாவத்தையைச் சேர்ந்த கனகரத்தினம் உஷாந்தினி (வயது 19) என்ற இளம் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

இரண்டு சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விழுந்த சமயம் கீழே விழுந்தவர் மீது பின்னர் வந்த மோட்டார் சைக்கிள் ஏறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-173-15)

---


உங்கள் அபிமான தந்திச்சேவை

## யாழ் - வன்னி தொடர்புச்சேவை

மீண்டும், சாவகச்சேரி தேவாலய வீதியில் தமிழீழ நீதிமன்றத்திற்கு அண்மையில் இயங்குகிறது. விவரங்களுக்கு கருமபீடத்தில் தொடர்பு கொள்ளவும்.

யாழ்— வன்னி தொடர்புச்சேவை
(தந்திச்சேவை)

தேவாலய வீதி,
சாவகச்சேரி. (E/001)


---

## ஓராண்டு நினைவஞ்சலி

வண. பிதா

### அன்ரன் இராஜகாரியரின்

முதலாம் நினைவஞ்சலி (01 - 02 - 1996)

''வாழ்வில் உம்மை நேசித்தவண்ணமே
இறப்பிலும் உம்மை மறவாதிருப்போம்''

ஜெசா. தம்பிநாயகம்
115, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
இல. 1/1, F அரச தொடர்மாடி,
கொழும்பு-4. (40036)

---

## கண்ணீர் அஞ்சலி

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய 10 ஆம் ஆண்டு மாணவனான

### செல்வன் கனகராசா சுரேஸ்குமார்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்தி சபை,
பழைய மாணவர் சங்கம்.

(40033)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 04 — 05 — 1923



மறைவு: 12 — 02 — 1995

### அமரர் முருகன் - தம்பு

இமையாணன்

திதி: 1996 — 02 — 01

அன்பும், பண்பும், பாசமும் வைத்து எமை ஆளாக்கி, வளர்த்த ஐயாவே! ஓராண்டு கழிந்தாலும் உங்கள் பாசப்பிரிவு எங்களை விட்டகலாது, உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திப்போம்

அன்புப்பிள்ளைகள், பாசமிகு
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்
மைத்துனர்கள்.

''தமிழ்த்தாரகை''
இமையாணன் — கிழக்கு,
வல்வெட்டித்துறை.
1996 - 02 - 01 (40283)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

### சேனாதிராசா பொன்னம்பலம்

(நயினாதீவு 1ஆம் வட்டாரம்)

தோற்றம்: 17-03-1953
மறைவு: 02-01-1996

02 - 01 - 1996 அன்று முன்னேஸ்ரம் சிலாபத்தில் அமரரான திரு. சேனாதிராசா பொன்னம்பலம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இடம்பெயர்ந்து பல இன்னல்கள் மத்தியிலும் எமது துயரில் பங்கேற்று ஆறுதல் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

Dr. N. சின்னத்தம்பி
''சிதம்பரம்''
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (40296)

---

# நிதித்துறை அறிவித்தல்

## வைப்பகத்திற்கு வருக.

கீழ்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 02 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை அறிவித்துள்ளது.

★ குட்டிப்பிள்ளை அரகேஸ்வரன்—கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு.
★ வைத்திலிங்கம் கந்தையா — நிலாவரை வீதி, நிர்வேலி வடக்கு, நீர்வேலி.
★ கந்தையா மதுரநாயகம் — கந்தர் ஓடை வீதி, ஆலடி, சுன்னாகம்.
★ முத்தையா அற்புதராஜா — தச்சன் தோப்பு, நாவற்குழி.
★ கிருஷ்ணபிள்ளை அகிலாண்டநாயகி — பிள்ளையார் கோவிலடி., அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
★ புவனேந்திரநாதன் மகேஸ்வரி (தேவி) — நவக்கிரி, புத்தூர்.
★ தர்மராசா பரமேஸ்வரி — நவக்கிரி, புத்தூர்.
★ தாமோதரம்பிள்ளை மாணிக்கவாசகம் — நவக்கிரி, புத்தூர்.
★ செல்வி கிருஸ்ணன் கிருஸ்ணபிள்ளை சாந்தி — உரும்பிராய் கிழக்கு, (காந்திஜி சனசமூக நிலையத்திற்கு அருகே)
★ இராசையா கனகரெட்ணம் — ஞான வைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
★ சின்னத்தம்பி ராசமணி—M. S. லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
★ சதானந்தன் ராசம்மா — குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளை.
★ கதிரமலை சண்முகராஜா — அச்சுவேலி வடக்கு, வல்லைவீதி, ஊரியான்.
★ பொன்னம்பலம் சிவஞானம் — எச்சட்டி, இடைக்காடு வடமேற்கு, அச்சுவேலி.
★ நாகலிங்கம் தயானந்தன் அல்லது திருமதி தனபூபதி தயானந்தன் — 16/03, பழம் வீதி, கந்தர்மடம்.
★ திருமதி குணபூரணி சதானந்தன் அல்லது செல்வி மாலதி சதானந்தன் — இல. 6/02, புறாடு முன் ஒழுங்கை, அரியாலை.
★ திருமதி இராசலெட்சுமி நெல்லிநாதன் அல்லது நெல்லிநாதன் சபானந்தர்— செட்டியார்மடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
★ ஆறுமுகம் கணேசலிங்கம் — சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கு, சுன்னாகம்.
★ இராசா குமாரசாமி — 39, புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
★ ஆறுப்பிள்ளை மாணிக்கம் நல்லம்மா — மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு, இணுவில்.
★ கனகரத்தினம் சிவரெட்ணம் —இலகடி ஒழுங்கை, இருபாலை கிழக்கு, இருபாலை.
★ சின்னையா திருஞானசம்பந்தர் — கே.கே.எஸ். றோட், மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு, இணுவில்.
★ மனுவேல் கிளமென்ற் (P. M. பேக்கப்) — 23, கொட்டடி றோட், குருநகர்.
★ த. சுப்பிரமணியம் (C. T. B. சாரதி) — சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
★ மார்க்கண்டு அருள்நேசராசா — றோ. கு. தேவாலய வீதி, உடுவில் வடக்கு, சுன்னாகம்.
★ சின்னப்பொடி செல்லையா — சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.
★ திரு. திருமதி தெய்வேந்திரன் சிறிரஞ்சனி — வன்னியசிங்கம் வீதி, தாவடி, கொக்குவில்.
★ இராசையா இராசசேகரம் — இராமுப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
★ சவிரியன் அலெக்சாண்டர் — இல. 06, கொண்டாடி றோட், குருநகர்.
★ திருமதி லோறன்ஸ் மரியாம்பிள்ளை — 63/02, மவுன் கார்மேல் றோட், குருநகர்.
★ அந்தோனிப்பிள்ளை றெஜீனா (சூசையப்பு வில்லி) — 42, புதுறோட், கொய்யாத்தோட்டம் பாசையூர்.
★ திருமதி இரத்தினம் பூரணம் —முதலியார் கோவிலடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
★ திருமதி சிவராசா மனோரஞ்சிதம் — முருகமூர்த்தி கோயில்வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.
★ சுப்பிரமணியம் திருவருட்செல்வம் அல்லது கந்தையா தம்பிராசா அல்லது சுப்பிரமணியம் அன்னலட்சுமி — ஏழாலை வடக்கு, ஏழாலை.
★ கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு — அரசகேசரி பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
★ திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் — 'மிதிலை' Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
★ நாகமணி பரமலிங்கம் — 14 B, மலர்மகள் வீதி, அரியாலை.
★ சுப்பிரமணியம் பத்மாவதி — 20/01, திருமகள் வீதி, அரியாலை.
★ சவரிமுத்து பிலிப் இராசநாயகம் (கபடன்) — பிரதான வீதி, இளவாலை.
★ பொன்னயா குமாரவேலு (இளைப்பாறிய ஆசிரியர்) — கந்தரோடை, சுன்னாகம்.
★ திருமதி விவேகானந்தராஜா வரவராணி — 36, பண்டாரிகுளம் லேன், நல்லூர்.
★ விஜயரத்தினம் தவக்குமரன் — பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.
★ சு. லோகேந்திரராசா — மே/பா. புவனேஸ்வரி கந்தையா அல்லது இராசலிங்கம் சரஸ்வதி, சைவ பாடசாலை ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு.
★ நாகலிங்கம் சிவகுரு — சிவன்கோவிலடி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.
★ கந்தப்பு குருசாமி — கரந்தன், நீர்வேலி.
★ திருமதி மனுவேல் விரிசிற்றம்மா — சம்பேதுருவார் கோவிலடி, ஊர்காவற்துறை. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பாடசாலைகள் இயங்குவதற்கு...

வடக்கில் பாடசாலைகளை விரைவில் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார்.

இன்றைய நிலையில் கல்வியை முன்னெடுப்பது சம்பந்தமாக நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இதனைக் கூறியிருக்கிறார்.

அண்மைக் காலச் சரித்திரம் காணாத அளவில், மிகப் பெரும் எண்ணிக்கையான மக்கள் வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்ததால்—

மூன்றே கால் இலட்சம் தமிழ் மாணவர்கள் கல்வி வசதி இன்றித் தமது காலத்தை வீணாக்குகிறார்கள். கடந்த நான்கு மாதங்களாக இவர்களின் கல்வி தடைப்பட்டுவிட்டது. கல்வி பருவத்தே பயிர் செய்யப்பட வேண்டியது.

தமிழர்களின் தனிப்பெரும் சொத்துக் கல்விதான். வேறெந்தச் சொத்து அழிந்தாலும் அதனைத் தேடிக் கொள்ளலாம். கல்வி அழிந்து போனால் தமிழர் சமூகமே அழிந்து போனதற்குச் சமமாகிவிடும்.

விடுதலைப் போராட்டம் தொடங்கிய பின்னர் கடந்த ஐந்து தசாப்தங்களாகத் தமிழர்கள் அனுபவித்து வரும் இன்னல்கள், இழப்புகள்; சந்தித்துவரும் அழிவுகள் அனர்த்தங்களின் மத்தியிலும் அவர்கள் தலை நிமிர்ந்து நிற்பது, மனந்தளராது நிற்பது, தாம் பெற்ற கல்வியினாலேயே ஆகும். கல்வி தமிழர்களுக்கு அறிவுச் செல்வமாக மட்டுமன்றி பொருட் செல்வமாகவும் விளங்குகிறது.

அதனால் தமிழ்ப் பெற்றோர்கள் எல்லோரதும் இப்போதைய முதற் கவலை தங்கள் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டுவிட்டதே என்பதாகும். இந்த நிலை நீங்காதா என்ற மன ஏக்கம் அவர்களை வாட்டி வருகிறது.

இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கு மாற்று இருப்பிட வசதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்காண்டாலே பாடசாலைகள் மீண்டும் இயக்கலாம். அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளதால் மேலதிக வகுப்பறை வசதிகளும் செய்யப்பட வேண்டும்.

இந்த வசதிகளைச் செய்வதில் சம்பந்தப்பட்ட சகலரும் ஒன்றிணைந்தும் விரைந்தும் செயற்படுவது அவசியம்.

தமிழர்களை ஒடுக்கிவிடுவதற்கான சிங்கள அரசுகளின் திட்டங்களில், அவர்களின் கல்வி வளத்தை அழிப்பதும் ஒன்றாகும். எழுபதுகளிலேயே அது ஆரம்பமாகி விட்டது.

ஆகையால் இப்போது—

போரைப் பயன் படுத்தித் தமிழர்களின் கல்வியை அழிப்பதில் ஸ்ரீலங்கா அரசு தீவிரமாகச் செயற்படும் என்று எதிர்பார்க்க வேண்டும்.

பேரரட்டத்தின் மத்தியிலும் கல்வியில் எந்தவிதமான தளர்வுகளும் வந்து விடக்கூடாது என்பதும், தமிழர்களின் கல்வி பேணப்பட வேண்டும் என்பதும் தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரனின் விருப்பமுமாகும்.

வடக்கில் பாடசாலைகளைத் திறந்து கல்வி போதனையை நடத்துவதற்கான முயற்சியில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நிறுவனங்கள் என்று எல்லாத் தரப்பினரும் கூட்டு முயற்சி மேற்கொள்ளுதல் அவசியம்.

# வன்னிப் பகுதிக்கு மருந்து அனுப்ப பாதுகாப்பு அமைச்சு இழுத்தடிப்பு

கிளிநொச்சி, பெப். 1

வன்னிப் பகுதிக்கு மருந்து வகைகளை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்து இழுத்தடிப்பு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சென்றிருந்த கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப்பணிப்பாளர் டாக்டர் சிவகுரு, கிளிநொச்சி ஆஸ்பத்திரி நிலைமை குறித்து சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள மருந்து பற்றாக்குறை பற்றி தாம் மருந்து விநியோகத்துக்கான அத்தியட்சர் டாக்டர் சமரநாயக்காவிடம் பிரஸ்தாபித்ததாகவும் அதை அடுத்து பற்றாக்குறையான மருந்து வகைகளை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்ததாகவும்—

ஆனால் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்க இழுத்தடிப்பதாகவும் டாக்டர் சிவகுரு தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி ஆஸ்பத்திரியைத் தரம் உயர்த்துவது பற்றி சுகாதார அத்தியட்சகர் றெஜி பெரேராவிடம் உரையாடிய போது—

அவ்விடயம் பற்றி சாதகமாகப் பரிசீலிப்பதாக அவர் குறிப்பிட்டார் என்றும் டாக்டர் சிவகுரு தெரிவித்தார்.

## பாடசாலை ரீதியான கலந்துரையாடல்கள்

பல்வேறு இடப்பெயர்ந்த பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஊழியர்களை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் கலந்துரையாடலில் பங்கு பற்றுவதற்கு அழைத்துள்ளனர். பாடசாலைகளினது கலந்துரையாடங்கள் நடைபெறும் இடங்கள், நேரங்கள் வருமாறு:-

★ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி:- இன்று காலை மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில்.

★ கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை;- இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரியில்.

★ கொழும்புத்துறை சென் யோசப் வித்தியாலயம்:- இன்று காலை 10 மணிக்கு சச்சாய் வீதி, சாவகச்சேரியில் உள்ள பிரதி அதிபரின் இல்லத்தில்.

★ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்:- இன்று காலை 8 30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில்

★ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்:- இன்று காலை 8.30 மணிக்கு மீசாலை விக்னேஸ்வரா ம. வியில்.

★ தாவடி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை;- இன்று காலை 9 மணிக்கு கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில். (உ-இ)

கைதாகி விடுவிக்கப்பட்ட

## மதகுருமார்கள் குறித்து ஆயர் மாநாடு அறிக்கை

கொழும்பு, பெப். 1

பெருந்தொகை பணம் உட்பட தடை செய்யப்பட்ட பொருள்களை யாழ்ப்பாணத்துக்குக் கடத்திச் செல்ல முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரகசியப் பொலீஸ் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மதகுருவான வண. ஜெபநேசன், இம்மானுவல்பயஸ் ஆகியோர் எதுவித குற்றச்சாட்டுக்களும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளனர் என கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டுக்கு அறிவிக்கப்பட்டதை பகிரங்கப்படுத்தி இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. (இ-8)

# வன்னிக்கு இடம்பெயர்ந்தோரின் உண்மையான எண்ணிக்கை என்ன?

## அரச அதிபர்களிடம் அஷ்ரப் கேட்கிறார்

கொழும்பு, பெப். 1

'யாழ்ப்பாணத்தில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளவர்களின் சரியான எண்ணிக்கையை யாழ். — கிளிநொச்சி அரச அதிபர்கள் உத்தியோக பூர்வமாக அரசாங்கத்துக்கு அறிவிக்க வேண்டும்.''

இப்படி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வடபகுதிக்கு உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவது தொடர்பாக நடைபெற்ற மாதாந்த கூட்டத்தில் வைத்தே அமைச்சர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

''எங்களுக்கு அகதிகளின் சரியான எண்ணிக்கை தெரியாது. இரண்டு அரச அதிபர்களும் வெவ்வேறு எண்ணிக்கையை சமர்ப்பித்துள்ளனர்'' என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எம். என். ஜுனைத் தெரிவித்தார்.

யாழ். அரச அதிபரும், கிளிநொச்சி அரச அதிபரும் அரசாங்கத்துக்கு சமர்ப்பித்துள்ள இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையில் வித்தியாசம் இருக்கிறது. ஒரு லட்சத்து 40 ஆயிரத்தால் இந்த வித்தியாசம் காணப்படுகிறது.

இதனால் எந்த அளவுக்கு உணவு அனுப்புவது என்பதில் தீர்மானம் எடுக்க முடியாமல் இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அரச அதிபர்கள், எம். பிகள் கலந்து கொண்டனர். (இ-3)

## படையினரின் பிள்ளைகள் கல்வி கற்க சலுகைகள்

கொழும்பு, பெப். 1

வடக்கு — கிழக்கு போர் முனைகளில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரினதும் இராணுவ நடவடிக்கையின்போது கொல்லப்படும் அல்லது அங்கவீனமுறும் படையினரினதும் பிள்ளைகளை தேசிய பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்காகான வசதிகள் அளிக்கப்படும். இந்தப் பிள்ளைகளுக்கு பாடநூல்கள், மற்றும் உபகரணங்களும் வழங்கப்படும்.

கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்,

யுத்த முனையில் பணியாற்றும் படையினருக்கு வீடுகளைக் கட்டுவதற்கென காணிகளும் வழங்கப்படும். கடன் வசதிகளையும் அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (இ-7)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

01 – 02 – 1996

இரவு

★ 8-00 — ஆரம்பம்
★ 8.02 — தியாக ராகங்கள்
★ 8-10 — நலந்தானா — நீரிழிவு நோய் பற்றிய வைத்தியக் குறிப்புகள்.
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்.

02 — 02 — 1996

காலை

★ 7.00 — ஆரம்பம்
★ 7-02 —மாவீரர் வணக்கம் தொடர்ந்து எழுச்சி கீதங்கள்.
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7 45 — அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்

## வடபகுதிப் பயணிகளின் தபால், மருந்து பறிமுதல்

### தாண்டிக்குளத்தில் கெடுபிடி

மட்டுவில் தெற்கு பெப். 1

வவுனியா, தாண்டிக்குளம் சோதனை முகாமில் படையினரின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

சோதனையின் போது படையினர், பெறுமதி மிக்க மருந்து வகைகளை மட்டும் அன்றி பயணிகளால் எடுத்து வரப்படும் தபால்களையும் பறிமுதல் செய்கின்றனர்.

சமீபத்தில் கொழும்பில் இருந்து வந்த பயணி ஒருவரிடம் இருந்து அவர் கொண்டு வந்த ரூபா. 300 க்கு மேல் பெறுமதியான மருந்து வகைகளையும் — கடிதங்களையும். படையினர் பறிமுதல் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடிதங்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து தபாலில் இடுவதற்கும் —

நேரடியாகக் கையளிப்பதற்கும் கொடுத்து விடப்பட்டவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பண்ணாகத்தைச் சேர்ந்த இவர் 18 கடிதங்களைக் கொண்டு வந்திருந்தார் என்றும் —

அத்தனையையும் படையினர் பறித்து விட்டனர் என்றும் —

இக்கடிதங்களில் ஒரு கடிதம் மிகவும் முக்கியமானது என்றும் அவரினால் தெரிவிக்கப்பட்டது. (இ-28)

## இளம் குடும்பத்தவரின் மரணத்தில் சந்தேகம்

### சடலம் பிரேத பரிசோதனைக்கு

தென்மராட்சி, பெப். 1

மரணமான இளம் குடும்பத்தவரின் சடலம் பளை காவல்துறையினரால் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது

கடந்ததிங்கட்கிழமைகாலை மீசாலையில் இச்சம்பவம் இடம்பெற்றது. சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

இயக்கச்சியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லப்பா திருச்செல்வம் (வயது 38) என்பவர் கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மரத்தில் இருந்து தவறி விழுந்து தலையில் காயம் ஏற்பட்டதாக பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

கடந்த 27 ஆம் திகதி அவர் அங்கு மரணமானார்.

சடலம் கடந்த திங்கள் காலை மீசாலையில் உள்ள அவரின் மாமனாரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்த சமயம் பளை காவல்துறையினரால் சடலம் பிரேதபரிசோதனைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதி மாலை முகமாலை கடை ஒன்றில் முன்னால் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இவர் காயமடைந்ததாக தெரியவந்ததை அடுத்தே இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடந்தேறின. இவரது மனைவி வெளிநாட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-13-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தரப்பில் அதிர்ச்சி!

# கொழும்பில் பதற்ற நிலை!!

கொழும்பில் நடை முறைப்படுத்தப்பட்ட பெரும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி — அரசின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையத்தின் மீது — நேற்று நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல் அரச பாதுகாப்பு வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இவ்வளவு பாதுகாப்புக்கு மத்தியிலும் இத்தாக்குதல் நடைபெற்றிருப்பதால் —

கொழும்பு நகரத்தை பாதுகாப்பதற்கு இனிமேல் என்ன செய்யலாம் என்று தெரியாமல் பாதுகாப்பு அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொள்வர் என்று பி.பி.ஸி. குறிப்பிட்டது.

இதேசமயம் —

இந்தக் குண்டு வெடிப்பால் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் பயமும் பதற்றமும் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. இத்தகைய தாக்குதல் தொடரலாம் என பெரும்பான்மைச் சிங்களவர்கள் அஞ்சும் அதேசமயம், அவர்களின் கோபம் சிறுபான்மைத் தமிழருக்கு எதிராகத் திரும்பி இனக் கலவரம் வெடிக்கலாம் என்றும் அஞ்சப்பட்டது.

தனது மக்களை அமைதி காக்கும்படி அரசு கோரியுள்ளது.

## மீட்பு, தீயணைப்பு பணியில் ஹெலிகள்

குண்டுவெடிப்பினால் தகர்ந்த கட்டடங்களுக்குள் சிக்கிக் கொண்டவர்களை மீட்குப் பணியிலும், கட்டடங்களில் எரிந்து கொண்டிருந்த தீயை அணைப்பதிலும் தீயணைக்கும் படையினடன் விமானப் படை ஹெலிகளும் ஈடுபட்டன.

குண்டு வெடிப்பால் பல கட்டடத் தொகுதிகளின் கீழ் மாடிகள் தகர்ந்ததால் அல்லது அவற்றில் பெரும் தீ பற்றிக் கொண்டதால் மேல் மாடிகளில் சிக்கிக் கொண்ட பொதுமக்கள் கீழே இறங்கி வரமுடியாத நிலையில் மேல்மாடிகளின் ஜன்னல்கள் ஊடாகவும், மொட்டை மாடிகளில் ஒன்று கூடியும் சீலைகளை கொடிகளாகப் பிடித்து அசைத்தவாறு அவலக்குரல் எழுப்பினர்.

சிலிங்கோ கட்டடத்தின் உச்சியில் உள்ள ஆகாசக் கடையிலும் பல டசின் கணக்கானோர் தப்பிக் கீழே வருவதற்காகக் காத்து நின்றனர்.

தீயணைப்புப் படையினர் கொண்டு வந்த — வாகனங்களில் பொருத்தப்பட்ட உயரமான ஏணிகள் மூலமும், ஹெலிகள் மூலமும் பொதுமக்கள் மீட்கப்பட்டனர்.

சில ஹெலிகள் பெரிய பரல்களை தாங்கியவாறு அருகில் உள்ள ஏரியிலிருந்து தண்ணீரை கொண்டு வந்து எரியும் கட்டடங்கள் மீது சொரிந்து தீயணைக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

## பொருளாதார இலக்கு மீதே தாக்குதல்

ஸ்ரீலங்காவின் பெருளாதாரத்தை இலக்கு வைத்தே மத்திய வங்கியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக செய்தி நிறுவனங்கள் குறிப்பிட்டன.

இது நாட்டின் பொருளாதாரத்துக்கு விழுந்த சாட்டையடி என்னும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஸ்ரீலங்கா பக்கமே தலை வைக்க விடாமல் தடுக்கும் தாக்குதல் என்றும் பி.பி.ஸி. குறிப்பிட்டது.

மத்திய வங்கியின் செயல்பாடு சில நாள்களுக்கு முடக்கப்பட்டாலும் நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகள் ஸ்தம்பித்து விடும் எனக் கட்டிக் காட்டப்படுகின்றது.

## புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பி. ஸி. தெரிவித்தது.

இதேவேளை குண்டுத் தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை என்று ஏஜென்சி செய்தி தெரிவித்தன. எனினும் இராணுவ, அரசியல் விமர்சகர்கள் பலரும் விடுதலைப் புலிகளே இத்தகைய தாக்குதலை நடத்தக் கூடியவர்கள் என்று ஊகம் தெரிவித்தனர்.

(அ)

## நேற்றிரவு வரை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலையே அவை மீள ஆரம்பமாகும் என்றும் மேலும் கூறப்பட்டது.

பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் என்பதால் அருகில் இருந்த பலரின் உடல்கள் சின்னாபின்னமாகி உருத் தெரியாமல் அழிந்திருக்கும் என்றும் கருதப்பட்டது.

பல கட்டடங்களில் தீ பிடித்திருப்பதால் அக்கட்டட இடிபாடுகளுக்குள் உயிருடன் சிக்கியோர் வெந்து கருகும் ஆபத்து இருப்பதாகவும் கூறப்பட்டது.

## கொழும்பில் மத்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிசக்தி வாய்ந்த இரண்டு வெடிகுண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டதாக ஒரு செய்தி தெரிவித்தது.

வேலை நாளான நேற்று மதியத்துக்குச் சற்று முன்னர் — மத்திய வங்கி அமைந்துள்ள ஜனாதிபதி மாவத்தைப் பகுதியில்— மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டிருந்த சமயம் — இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இந்தத் தாக்குதலினாலும் அதன் பின்னர் ஏற்பட்ட பெரும் தீயினாலும் அப்பகுதியிலிருந்த பத்துக்கும் அதிகமான — பல மாடிகளைக் கொண்ட — கட்டடங்கள் நாசமாகியுள்ளன.

நேற்றிரவு வரை பல கட்டடங்கள் தீயில் எரிந்து கொண்டிருந்தன.

மத்திய வங்கியும் அதற்கு முன்னால் இருந்த சிலிங்கோ கட்டடமுமே முற்றாக நாசமாகியிருக்கின்றன.

சிலிங்கோ கட்டடத்துக்கு அருகில் இருந்த கட்டடங்களும், மத்திய வங்கிக்கு அருகிலிருந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலும் பெரும் சேதமடைந்துள்ளன.

ரோய்ட்டர் செய்தி நிறுவன அலுவலகம், எயர்லங்கா பயணச் சீட்டு விநியோக அலுவலகம் என்பனவும் சேதமுற்றன.

வெடிகுண்டுடன் வந்த வாகனம், மத்திய வங்கியின் முன்புறத்தில் வெடித்ததாகக் கூறப்படும் இடத்தில் சுமார் பத்து அடி ஆழமும், பதினைந்து அடி விட்டமும் கொண்ட பெரும் குழி ஒன்று ஏற்பட்டிருக்கின்றது.

## வெடிகுண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட—

வங்கியின் பிரதான வாசலுக்கு முன்பாக இரும்பு மற்றும் கொங்கிறீட் தடைகளை அந்தத் துப்பாக்கி நபர்கள் அகற்றி, வெடிகுண்டு தாங்கிய டிரக் வாகனம் வங்கி முற்புறமாக உள்ள கட்டடத்துடன் மோதி தாக்குதலை நடத்துவதற்கு வசதியாக வழி ஏற்படுத்தியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

இந்தக் குண்டுத் தாக்குதல் நடந்த அதே சமயம் அருகில் இருந்த கட்டடங்களை நோக்கி றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

வெடி குண்டுடன் வந்த டிரக்கில் தற்கொலைத் தாக்குதல் நபருடன் வேறு ஐவர் ஆயுத பாணிகளாக வந்ததாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது (உ)

## வடமராட்சியில் ஷெல்லுக்கு சிறுமி பலி!

வடமராட்சிப் பகுதியை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் சிறுமி ஒருத்தி பலியானார்; நால்வர் காயமடைந்தனர்; சில வீடுகளும், லாண்ட்மாஸ்டர் வாகனம் ஒன்றும் சேதமுற்றன; சில கால்நடைகளும் இறந்தன.

உடுப்பிட்டி வாசிகசாலைப் பகுதியில்விழ்ந்த ஷெல்லினால் படுகாயமடைந்த பாலேந்திரராசா கயல்விழி (வயது 12) என்ற சிறுமி ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

மற்றும் கோண்டாவிலில் இருந்து இடம்பெயர்ந்த ஆறுமுகம் சிவனேஸ்வரி (வயது [illegible]) உடுப்பிட்டியைச் [illegible] களான பாலசிங்கம் சியாமளா, (வயது 18), இரத்தினம் குமாரானந்ததேவன் (வயது40) ஆகியோரும் —

கம்பர்மலை வாசிகசாலையடியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் அவ்விடத்தைச் சேர்ந்த சிவலிங்கம் விஜிதரன் (வயது9) என்ற சிறுவனும்— [illegible]

(உ-15-80-173)

## குண்டு வெடிப்புகள் தொடரும் ஆபத்து

''கொழும்பில் மேலும் தாக்குதல்கள் நடப்பதற்கான ஆபத்து இருக்கிறது'' இவ்வாறு கொழும்பில் உள்ள இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ஹீல்ட் கருத்து தெரிவித்தார்.

''குண்டுத் தாக்குதல் நடப்பதற்கான ஏது நிலை உண்டு என்று நாங்கள் பல காலமாக கூறிவந்தோம். இந்த ஆபத்து தொடர்ந்தும் உண்டு என்பது வெளிப்படை''— என்றார் அவர்.

(உ-3)

## பல மைல்களுக்கு அப்பால் கரும் புகை தெரிந்தது

நேற்று குண்டு வெடிப்பால் கொழும்பு கோட்டைப் பகுதிக் கட்டடங்களில் பரவிய தீயினால் ஏற்பட்ட கரும்புகை பல மைல்களுக்கு அப்பாலும் தெரிந்ததாக அறிவிக்கப்பட்டது.

கொழும்பில் நிகழ்ந்த மிகப் பெரிய பேரழிவுச் சம்பவம் இது வென பல செய்தி நிறுவனங்கள் வர்ணித்தன.

மிக அழகுறக் காட்சியளிந்த ஜனாதிபதி மாவத்தை ஒரு சில செக்கன்களில் அழிந்து இடிபாடுகளாகக் காட்சியளித்தது.

எங்கும் ஒரே புகை மண்டலம் காணப்பட்டது தீ சுடர் விட்டு எழுந்து நெருப்புப் பரவியது.

கட்டடங்கள் எரிந்த அதே சமயம் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் பலவும் தீப்பிடித்து எரியத்தொடங்கியதால் நிலைமை மிகவும் மோசமானது.

தீயினாலும், குண்டுத் தாக்குதல் அழிவுகள் வீதிகளில் கிடந்ததாலும் தாக்குதலுக்கு இலக்கான பகுதியை மீட்புக் குழுக்கள் சென்றடைவது மிகவும் கஷ்டமாக இருந்தது.

## தாக்குதல் நடத்திய இருவர் கைதாம்!

வெடிகுண்டுத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட இருவரை பொதுமக்களின் உதவியுடன் தாங்கள் பிடித்திருப்பதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் இருவரும் ஒப்புக் கொண்டிருப்பதாகவும் —

அவர்களிடமிருந்து தற்கொலைத் தாக்குதல் நபர்கள் அணியும் இரண்டு ஜாக்கெட்டுகள் (மேலாடைகள்), ரி 56 ரகறைபிள்கள் இரண்டு, ஆறு கிரனேட்டுகள், இரண்டு தொலைத் தொடர்புக் கருவிகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும் —

குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்திலிருந்து றொக்கட் லோஞ்சர் ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் — பாதுகாப்பு அமைச்சு மேலும் அறிவித்தது.

## நடவடிக்கை தொடருமாம் ரத்வத்தை அறிவிப்பு

கொழும்பு, ஒபப். 1

கொழும்பில் பெரும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு விட்டது என்பதற்காக வடக்கிலும், கிழக்கிலும் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டா. அவை தொடர்ந்து நடைபெறும். இத்தகைய ஒரு தாக்குதல் மூலம் தெற்கில் இனக் கலவரத்தைத் தூண்டும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மக்கள் அதற்குப் பலியாகக்கூடாது.

—நேற்றைய குண்டு வெடிப்புச் சம்பந்தமாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

## மரண அறிவித்தல்

### குருநாதர் காசிப்பிள்ளை

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட குருநாதர் காசிப்பிள்ளை 31 - 01 - 96 அன்று காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், யோகேஸ்வரி (ஆசிரியர்- சென்திரேசா, அச்சுவேலி), நாகேஸ்வரி (யாழ். கூட்டுறவு பதிப்பகம்), கமலேஸ்வரி, கமலாசினி (பிரான்ஸ்), செந்தில்நாதன் (டென்மார்க்) ஆகியோரின் தகப்பனாரும், அம்பிகைராசா, கணேசலிங்கம் ஆகியோரின் மாமனாரும், பிரதீபன் (போராளி - மணாளன்), பிரசாந்தன், கிரிசாந்தன், சுபதீபன், தர்சன், தர்சினி, சுஜந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-2-96) பி. ப. 2 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்லம்மா (மனைவி)

தற்போதைய முகவரி:
ஆறுமுகம் குகதாஸ்,
தோப் ஒழுங்கை,
(மாறன் வீதி),
மட்டுவில் வடக்கு.

(40300)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 01-02-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org